**2018ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 10.09.2018ம் நாள் திங்கள் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு. வே. கிருஷ்ணகுமார், டி.சி.இ.,**
**நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ)**

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் ஆகஸ்டு 2018ம் மாத நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 2**

அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018ன் படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சியின் சட்டம் 1920 அட்டவணை 4ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் தருமபுரி நகராட்சி சொத்து வரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு சொத்து உரிமையாளர் / குடியிருப்போர் / குத்தகைதாரர் சமர்பிக்கும் சொத்துவரி சுய மதிப்பீட்டு விவர அறிக்கையில் உள்ள விவரங்களை அடிப்படையாக கொண்டி இருக்கும். மேலும் கீழ்கண்டுள்ளவாறு மண்டல அடிப்படை மதிப்பு (Zonal Value) 01.04.2018 முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. A, B & C என மூன்று மண்டலங்களாக தெருக்களை பிரிக்கப்பட்டு தருமபுரி நகராட்சி இணையதள முகவரி 123.63.242.116/Dharmapuri மற்றும் தருமபுரி நகராட்சி அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்யவும் இவ்விபரங்களை நேரடியாக மேற்படி இணையளத்தின் வாயிலாகவும் வெளியிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு**

| வ.எண் | தற்போதைய மண்டல அடிப்படை மதிப்பு | உயர்த்தப்பட்ட மதிப்பு |
|---|---|---|
| 1 | A - 1.50 | A - 2.25 |
| 2 | B - 1.25 | B - 1.90 |
| 3 | C - 0.80 | C - 1.20 |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 3**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.22866/பி3/2018 நாள் 23.08.2018ல் தருமபுரி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 ஆண்டின் கீழ் தருமபுரி நகராட்சி 33 வார்டுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்கா குப்பை என தரம் பிரிக்கப்பட்டு வருகிறன்றது. மக்கும் குப்பையில் இருந்து உரம் தயாரிக்க வார்டு எண்4 சந்தைபேட்டை 1எண்ணிக்கை 4 TPD நுண்ணியிர் உரமையம், வார்டு எண் 33 அன்னசாகரம் சுடுகாட்டில் 1 எண்ணிக்கை 4 TPD நுண்ணியிர் உரமையம், வார்டு எண் 10 குமாரசாமிபேட்டை அரிசந்திர சுடுகாட்டில் 1 எண்ணிக்கை 4 TPD நுண்ணியிர் உரமையம் மற்றும் வார்டு எண் 30 பச்சையம்மன் சுடுகாடுட்டில் 1 எண்ணிக்கை 4 TPD நுண்ணியிர் உரமையம் அமைக்க ரூ.246.04 லட்சம் (மத்திய அரசு பங்களிப்பு 35%, மாநில அரசு பங்களிப்பு 55%, நகராட்சி பங்களிப்பு 10%) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 4**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறைகள் ஆணை ந.க.எண்.22866/பி3/2018 நாள்.23.08.2018ல் தருமபுரி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 ஆண்டின் கீழ் தடங்கம் உரக்கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை அகற்ற ரூ.371.00 லட்சம் (மத்திய அரசு பங்களிப்பு 35%, மாநில அரசு பங்களிப்பு 55%, நகராட்சி பங்களிப்பு 10%) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 5**

தருமபுரி நகராட்சி வார்டு எண்.26 சாலை வினாயகர் ரோட்டில் வசந்த பவன் ஓட்டல் அருகில் மழை நீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு, நகர் மன்ற தீர்மான எண்.329 நாள் 14.02.2018ல் ரூ1.80 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை, தொடர்ந்து 15.05.2018ம்

தேதியில் வரபெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்பு நோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | திரு.தி.கோவிந்தன் | –0.03%குறைவு |
| 2 | திரு.டி.எஸ்.ஜப்பார் | 0.28%அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வாரிசை எண்1ல் கண்ட திரு.தி.கோவிந்தன் அவர்களின் குறைந்த ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 6**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 18ல் அம்பலத்தாடி நகராட்சி துவக்கப் பள்ளியில் புதியதாக பொருட்கள் இருப்பு அறை, சமையல் கூடம் அமைக்க நகர் மன்ற தீர்மான எண் 461 நாள் 14.03.2018ல் ரூ.6.20 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 15.05.2018ம் தேதியில் வரபெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்பு நோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | திரு.கே.கனகராஜ் | –0.01%குறைவு |
| 2 | திரு.எஸ்,ரஷீம் | 0.13%அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வாரிசை எண் 1 ல் கண்ட திரு.கே.கனகராஜ் அவர்களின் குறைந்த ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண் : 7**

தியாகி தீர்த்தகிரியார் தெரு அன்னசாகரத்தில் 200 மீட்டர் பழுதடைந்த கழிவு நீர் கால்வாயினை புதியதாக அமைக்க நகர் மன்ற தீர்மான எண் 430 நாள் 17.05.2018ல் ரூ9.50 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 15.05.2018ம் தேதியில் வரபெற்ற ஒப்பந்தப் புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்பு நோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | திரு.டி.எஸ்.ஜப்பார் | –0.04%குறைவு |
| 2 | திரு.டி.எஸ்.எக்பால் | 0.29%அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வாரிசை எண் 1ல் கண்ட திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்களின் குறைந்த ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண் : 8**

தருமபுரி நகராட்சி வார்டு எண்1ல் கிருஷ்ணன் புதிய கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு, நகர் மன்ற தீர்மான எண் 429 நாள் 17.05.2018ல் ரூ4.25 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 15.05.2018ம் தேதியில் வரபெற்ற ஒப்பந்தப் புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம் ஒப்பு நோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | திரு.டி.எஸ்.ஜப்பார் | –0.03%குறைவு |
| 2 | திரு.டி.எஸ்.எக்பால் | 0.29%அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வாரிசை எண் 1 ல் கண்ட திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்களின் குறைந்த ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண் : 9**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 4 ல் உருது நகராட்சி நடுநிலைப் பள்ளியில் கல்வி நிதியின் கீழ் ஸ்மார்ட் வகுப்பறை வசதிகள் செய்யதல், பழைய கட்டிடத்தை பழுது நீக்கம் செய்தல், பள்ளியில் உள்ள 5 கட்டிடத்திற்கு வர்ணம் செய்தல் பணியினை நகர் மன்ற தீர்மான எண் 398 நாள் 28.03.2018ல் ரூ.7.25 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 15.05.2018ம் தேதியில் வரபெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்பு நோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்,ரஷீம் | –0.06.%குறைவு |
| 2 | திரு.கே.கனகராஜ் | 0.44%அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வாரிசை எண் 1 ல் கண்ட திரு.எஸ்.ரஷீம் அவர்களின் குறைந்த ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண் : 10**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29AM7501-க்கு லாரிக்கு பேட்டரி வாங்கி 3½ ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், வாகனம் ஸ்டாட் செய்வது சிரமமாக உள்ளது. வாகனத்தை தள்ளி இயக்கும் நிலையில் உள்ளது. மேற்படி புதிய பேட்டரி வாங்கிக்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் 23.07.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.11,700/- |
| 2. | ஸ்ரீ ஓம் சக்தி ஆட்டோ மொபைல்ஸ் | Rs.13,200/- |
| 3. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.12,900/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 11**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29AM8348 வாகனத்தின் பழுதினை சரி செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 14.08.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.27,450/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.27,800/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.26,450/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 12**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் JCB வாகனம் TN29H8078-க்கு பேட்டரி வாங்கி 40 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டதால், வாகனம் ஸ்டாட் செய்வது சிரமமாக உள்ளது. மேற்படி புதிய பேட்டரி வாங்கிக்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் 14.08.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.13,800/- |
| 2. | ஸ்ரீ ஓம் சக்தி ஆட்டோமொபைல்ஸ் | Rs.14,100/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.13,200/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 13**

தருமபுரி நகராட்சி 2017–2018ம் ஆண்டுக்கான வருவவய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதிகளுக்கான ஆண்டுக் கணக்குகள் இணைய தளத்தில் தயார் செய்து தணிக்கைக்கு சமர்த்தமைக்கு ரூ.50,000/– கிருஷ்ணமூர்த்தி ஜெ.கே. கன்சல்டென்ட் (அக்கவுண்ட்ஸ்) அவர்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண் : 14**

தருமபுரி நகராட்சி வார்டு எண்26 சாலை வினாயகர் ரோட்டில் உள்ள அங்கன்வாடி கட்டித்தின் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு, மன்ற தீர்மான எண் 327 நாள் 14.02.2018ல் கல்வி நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள ரூ1.50 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை, தொடர்ந்து 15.05.2018ம் தேதியில் வரபெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திரு.திப்புகுட்டி(எ)முனியப்பன் | 0.02% குறைவு |
| 2 | திரு.டி.எஸ்.ஜப்பார் | 0.0% சமம் |

**அலுவலகக்குறிப்பு**

வரிசை எண்1ல் கண்ட திரு.திப்புகுட்டி (எ) முனியப்பன் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 15**

தருமபுரி மாவட்டம் ஏ.ரெட்டிஅள்ளி கிராமம் சோகத்தூர் பஞ்சாயத்துக்கு உட்டபட்ட நில அளவை,எண் 104/3,104/4,104/5,456/1,456/1,456/3,456/4,456/6,456/7, 456/8,457, 459/1,460,467/1,99/2ஏ105/2ஏ,99/3பி1, 99/3பி2–ல் உள்ள 9 ஏக்கர் நிலப்பரப்பில் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆணை எண் 72 (MS) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.07.2018ல் வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து பேருந்து நிலையம் அமைக்க உள்ள 9 ஏக்கர் நிலம் சம்மந்தப்பட்ட நில உரிமையாளரிடம் தானமாக பெறுவதற்கு அரசு ஆணை எண் 80 (MS) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.08.2018ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசு ஆணையின்படி அ வகுப்பு பேருநது நிலையம் PPP முறையில் தனியார் பங்களிப்புடன் அமைப்பதற்கு பணிகள் தயார் செய்து கொடுக்க கீழ்கண்ட விவரப்டி விலைப்புள்ளிகள் 03.09.2018ல் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**1). INFRA STRUCTURE CONSULTANT**

| வ. எண் | பணியின் விவரம் | பணிகள் முடிக்க வேண்டடிய காலம் | விலைப்புள்ளி (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | Preparation of Financial Model | 5நாட்கள் | |
| 2 | Submission of RFQ as per PPP guidelines and TNIDB Format | 10நாட்கள் | |
| 3 | Developing of RFP as per PPP | 10நாட்கள் | |
| 4 | Drafting of Concessionaire agreement as per PPP guidelines and TNIDB format | 10நாட்கள் | |
| 5 | Presentations to CMA and Secretary when ever required | தேவைப்படும்போதெல்லாம் | |
| 6 | Assistance to ULBS for Tender floating | 7 நாட்கள் அனுமதி RFP | 4,85,000.00 |
| 7 | Evaluation of RFQ and Submission of report | 2நாட்கள் | |
| 8 | Evaluation of RFP and Submission of report | 2நாட்கள் | |
| 9 | Assists to ULBS up to issue LOA and Work order | 7நாட்கள் | |
| 10 | Preparation of PPT and assisting ULBS for getting approval from TNIDB | தேவைப்படும்போதெல்லாம் | |

**2). SREE DAMODAR CONSULTANCY SERVICES**

| வ எண் | பணியின் விவரம் | பணிகள் முடிக்க வேண்டடிய காலம் | விலைப்புள்ளி (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | Preparation of Financial Model | 5நாட்கள் | |
| 2 | Submission of RFQ as per PPP guidelines and TNIDB Format | 10நாட்கள் | |
| 3 | Developing of RFP as per PPP | 10நாட்கள் | |

| | | | |
|---|---|---|---|
| 4 | Drafting of Concessionaire agreement as per PPP guidelines and TNIDB format | 10நாட்கள் | |
| 5 | Presentations to CMA and Secretary when ever required | தேவைப்படும்போதெல்லாம் | |
| 6 | Assistance to ULBS for Tender floating | 7 நாட்கள் அனுமதி RFP | 4,60,000.00 |
| 7 | Evaluation of RFQ and Submission of report | 2நாட்கள் | |
| 8 | Evaluation of RFP and Submission of report | 2நாட்கள் | |
| 9 | Assists to ULBS up to issue LOA and Work order | 7நாட்கள் | |
| 10 | Preparation of PPT and assisting ULBS for getting approval from TNIDB | தேவைப்படும்போதெல்லாம் | |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் வரிசை எண்2ல் காணும் SREE DAMODAR CONSULTANCY SERVICES நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி ஏற்று அவசர அவசியத்தினை கருதி பணி உத்தரவு வழங்கியதையும் அதற்கான தொகை ரூ.4.60 லட்சம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் : 16**

மாவட்ட ஆட்சித் தலைவர் தருமபுரி அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.2782/2017/அ5, நாள் 10.05.2018—ல் அரசு மருத்துவக் கல்லூாரி மருத்துவ மனைக்கு ஒகேனக்கல் குடிநீர் இணைப்பு பைப்லையின் அமைக்கும் பணிக்கு ரூ.1.80லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. தருமபுரி அரசு மருத்துக் கல்லூாரி மருத்துவமனைக்கு குடிநீர் வசதி உடனடியாக தேவைப்படுவதால் இப்பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் விதி 15ன் கீழ் இப்பணியினை நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.கே.முழுமதி அவர்களின் மூலம் செய்தமைக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 17**

நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை அவர்களின் மின் அஞ்சல் செய்தியில் தற்போது மழைக்காலமாக உள்ளதால், வாகன போக்குவரத்துக்கு இடையூராக உள்ள பழுதடைந்துள்ள சாலைகளை பழுது பார்த்து செப்பணிடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகளில் உள்ள பழுதடைந்துள்ள சாலைகளை பழுதுபார்த்தல் மற்றும் செப்பணிடும் பணிக்கு ரூ9.50 ஏற்படும். செலவினத்தினை பொது நிதியிலிருந்து செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் : 18**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட டி.எம்.எஸ் காலனியில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கிவருவதாகவும் மழை நீர் தேங்குவதால் காலரா மற்றும் கொசுக்கல் உற்பத்தி ஆகி டெங்கு காய்சல் ஏற்பட வாய்புள்ளதாகவும் மேற்கண்ட இடத்தில் மழை நீர் கால்வாய் அமைத்து மழை நீரினை வெளியேற்றுமாறு TAMS காலனி பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே தற்போது மழைக்காலம் என்பதால் TAMS காலனியில் மழை நீர் கால்வாய் அமைக்கும் பணி அவசியமாக உள்ளதால் இப்பணிக்கு ரூ27.50 ஏற்படும். செலவினத்தினை பொது நிதியிலிருந்து செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

## பொருள் எண் : 19

தமிழ் நாடு சட்டமன்றப்பேரவையில் 2018—2019ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல் துறைக்கான மானியக்கோரிக்கை எண் 34 அறிவிப்பு எண் 14ன் படி இந்நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளில் உயர்தரமான குடிநீர் மிகக்குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநிர் மையங்கள் நிறுவக்கோரி அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மேற்படி இந்நகராட்சி பகுதியில் கீழ்கண்ட 33 இடங்களில் தானியங்கும் குடிநிர் மையங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது அதன் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தெருவின் பெயர் |
|---|---|---|
| 1 | **வார்டு எண்** 1 | புதிய திருபத்துார் ரோடு |
| 2 | **வார்டு எண்** 2 | மதிகோண்பாளையம் |
| 3 | **வார்டு எண்**3 | காமட்சியம்மன் கோயில் தெரு |
| 4 | **வார்டு எண்**4 | சந்தைபேட்டை |
| 5 | **வார்டு எண்** 5 | கோட்டைகோயில் ரோடு |
| 6 | **வார்டு எண்** 6 | பாபா சாகிப் தெரு |
| 7 | **வார்டு எண்**7 | குப்பாண்டி தெரு |
| 8 | **வார்டு எண்** 8 | கோல்டன் தெரு |
| 9 | **வார்டு எண்** 9 | வட்டார வளர்ச்சி காலனி |
| 10 | **வார்டு எண்**10 | பென்னாகரம் ரோடு |
| 11 | **வார்டு எண்** 11 | குமாரசாமி பேட்டை தெரு |
| 12 | **வார்டு எண்** 12 | அப்பாவு நகர் |
| 13 | **வார்டு எண்** 13 | எம்.ஜி,ஆர் நகர் |
| 14 | **வார்டு எண்** 14 | பென்னாகரம் ரோடு குமாரசாமி பேட்டை |
| 15 | **வார்டு எண்** 15 | திரு.வி.க.தெரு |
| 16 | **வார்டு எண்** 16 | தெற்கு இரயில்வே லையின் |
| 17 | **வார்டு எண்** 17 | கந்தசாமி வாத்தியார் தெரு |
| 18 | **வார்டு எண்** 18 | ஆரம்ப சுகாதர நிலையம் (பேருந்து நிலையம்) |
| 19 | **வார்டு எண்** 19 | குப்தா தெரு |
| 20 | **வார்டு எண்** 20 | மாரியம்மன் கோயில் தெரு |
| 21 | **வார்டு எண்** 21 | அங்காளம்மன் கோயில் தெரு |
| 22 | **வார்டு எண்** 22 | அரிகரநாதசாதி சாமிகோயில் தெரு |
| 23 | **வார்டு எண்** 23 | நகராட்சி அலுவலகம் |
| 24 | **வார்டு எண்** 24 | சத்திரம் மேல் தெரு |
| 25 | **வார்டு எண்** 25 | சாலை வினயாகர் கோயில் சாலை |
| 26 | **வார்டு எண்**26 | கொள்ளஅள்ளி ரோடு |
| 27 | **வார்டு எண்** 27 | சந்திரமொளி லேஅவுட் |
| 28 | **வார்டு எண்** 28 | நௌசவாளர் காலனி மேல்நிலை நீர்தேக்க தொட்டி |
| 29 | **வார்டு எண்** 29 | நௌசவாளர் காலனி மேல்நிலை நீர்தேக்க தொட்டி |
| 30 | **வார்டு எண்**30 | அம்பேத்கார் காலனி |
| 31 | **வார்டு எண்** 31 | 66 அடி ரோடு |
| 32 | **வார்டு எண்** 32 | தோப்பு தெரு |
| 33 | **வார்டு எண்** 33 | அன்னசாகரம் நகராட்சி பள்ளி |

மேற்கண்ட இடங்களில் செயல்படுத்தவும் இதற்கான அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

### அலுவலக குறிப்பு:

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்படி பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரவும் நாளிதழிழ் விளம்பரம் செய்ய ஆகும் செலுவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

3). மெலும் தானியங்கும் குடிநீர் மையங்கள் (AUTO MATC VENDING CENTER) தனியார் நிறுவனங்கள் தொழில் முனைவோர்கள் மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மேலும் அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுனுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை—05 அவர்களிடம் அனுமதிபெற கருத்துரு அனுப்பி வைத்ததையும் மேற்படி பணிகள் அவசர அவசியம் என்பதால் நகர் மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்லாம்.

**தனி அலுவலர்**
**மற்றும் ஆணையாளர் (பொ)**
தருமபுரி நகராட்சி.

**2018ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 10.09.2018ம் நாள் திங்கள் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 முதல் 2 வரை | 507 முதல் 508 வரை | அனுமதிக்கப்பட்டது |
| பொருள் : 3 முதல் 4 வரை | 509 முதல் 510 வரை | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 5 முதல் 15 வரை | 511 முதல் 521 வரை | அனுமதிக்கப்பட்டது |
| பொருள் : 16 | 522 | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 17 முதல் 19 வரை | 523 முதல் 525 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.